**பொல்பிதிகம பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 22 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஜுலை 17 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 17 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொல்பிதிகம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்ட 02 நிலையான வைப்புக் கணக்குகளின் ரூபா. 165,818 மற்றும் ரூபா. 925,257 ஆகிய வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கு காலப்பகுதிக்கான வட்டி வருமானம் முறையாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முக்கள் வங்கியின் மீதிச் சான்றிதழ் 2019 டிசம்பர் 31ஆம் திகதி பெறப்பட்டதன் பின்னர் 2020ஆம் ஆண்டினுள் வட்டியை கணக்கீடு செய்கின்றேன். |
| (ஆ) | 06 நூலகங்களுக்கு நன்கொடையாக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா. 90,294 பெறுமதியான புத்தகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | நன்கொடையாக கிடைக்கின்ற சொத்துக்கள் கணக்கிடப்படல் வேண்டும். | 2020ஆம் ஆண்டில் நாட்குறிப்புப் பதிவுகள் மூலம் குறித்த தவறுகளை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | தேவையான தகவல்கள் வழங்கப்படாமை காரணமாக ரூபா. 146,118,659 பெறுமதியான 04 கணக்குத் தலைப்புகள் | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் | நிலையான வைப்புச் சான்றிதழ் காணாமல் போயுள்ளது. முற்பணம் |

| | | |
|---|---|---|
| கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | தொடர்பான தகவல்கள் எவற்றையும் வெளிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் இல்லை. கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளுக்கான மீதிச் சான்றிதழ்களை 2020ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,656,231 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,115,048 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 3,120,000 | 2,544,857 | 2,544,857 | - | 1,975,000 | 1,975,000 | 2,356,720 | 2,342 |
| ii. | வாடகை | 7,637,420 | 1,288,826 | 1,258,644 | 40,850 | 7,685,600 | 7,685,600 | 7,483,346 | 10,668 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,150,100 | 946,202 | 946,202 | - | 850,100 | 850,100 | 1,066,613 | - |
| iv. | ஏனைய வருமானம் | 775,000 | 9,530,376 | 9,530,376 | - | 10,175,000 | 10,175,000 | 363,583 | - |
| | மொத்தம் | 12,682,520 | 14,310,261 | 14,280,079 | 40,850 | 20,685,700 | 20,685,700 | 11,270,262 | 13,010 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற

சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் சட்டத்தின் 126 வது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 12 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | உப விதிகளை வரைவு செய்து சமர்ப்பிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்ந்தும் அத்தியாவசியமான உப விதிகளை வரைவு செய்து கொண்டுள்ளேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 1999 யூலை 13 ஆம் திகதி வருடாந்தம் 2.5 சதவீத வட்டியின் அடிப்படையில் இலங்கை உள்ளூராட்சி சேவை பொதுச் சங்கத்தில் வைப்புச் செய்யப்பட்ட 50,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வைப்புத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவ்வாறான ஒரு நிறுவனம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளமையால், 2020 மார்ச் 12 ஆம் திகதிய பொதுச் சபை தீர்மானத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்து குறித்த நிறுவனத்திடமிருந்து பணத்தை அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், 2020 மே 29ஆம் திகதி பொ.பி/பி.ச/02/02/07 இலக்க கடிதம் மூலம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருட இறுதியில் ஒரு வருடத்தைக் கடந்துள்ள அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 2,899,560 தொகையில் 2020 ஜுன் 31 ஆம் திகதி அளவில் மேலும் 107,164,703 அறவிடப்பட வேண்டியிருந்தது. | பெற வேண்டிய கணக்கு மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவையாகவிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா. 3,523,323 தொகை பிரதான செயலகத்தின் மூலம் கோரப்பட்டுள்ள போதும் இதுவரையில் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும், ரூபா. 4,367,797 ஆகவிருந்த நிர்மாணக் கடன் பட்டோரிடமிருந்து ரூபா. 2,463,077 தொகை அறவிடப்பட்டுள்ளது என்பதையும், எஞ்சிய ரூபா. 1,904,719 தொகை எதிர்காலத்தில் அறவிடப்படும் என்பதையும் குறிப்பிடுகிறேன். |
| (இ) | வருடத்தின் இறுதியில் காணப்பட்ட ரூபா. 90,123,203 ஆகிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா. 88,209,931 தொகை இன்னும் செலுத்த வேண்டியிருந்தது. | கணக்கு மீதிகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 05 வருடங்களைத் தாண்டி சீர் செய்யப்படாதிருந்த கடன் கொடுத்தோர் மீதியின் கூட்டுத்தொகை ரூபா. 5,304,622 ஆகவிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பான கோவைகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக இதுவரையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாதுள்ளதுடன், அவை சீர் செய்யப்பட்டதும் எதிர்காலத்தில் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும், 01 வருடத்திற்கு கூடிய 03 வருடங்களை விடக் |

| | | |
|---|---|---|
| | | குறைந்த கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா. 3,252,902 ஆகவிருந்ததுடன் தற்போது மீதி ரூபா. 1,667,965 ஆகவுள்ளது. எதிர்காலத்தில் மீதித் தொகையையும் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அனுமதித்த 12 தொலைபேசி கோபுரங்களுக்காக ரூபா. 71,500 கட்டணம் அறவிடப்பட்டு இணைக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வில்லை. திட்டம் அனுமதிக்கப்பட்டு ஒரு வருடத்தைத் தாண்டிய 06 கோபுரங்கள் இணைக்கச் சான்றிதழ் இன்றி பயன்படுத்தப் பட்டிருந்ததுடன் அதற்காக ஒரு நாளைக்கு ரூபா. 50 வீதம் அறவிடப்பட வேண்டிய தண்டப்பணம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா. 1,253,650 ஆகவிருந்தது. | உரிய கட்டணங்களை அறவிட்டு இணைக்கச் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டு 02 தொடர்பாடல் கோபுரங்களுக்கான நிர்மாணத் திட்டங்கள் 2019 மார்ச் 26 ஆம் திகதி மற்றும் 2019 ஏப்ரல் 24 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு ஒரு வருட காலம் நிர்மாண வேலைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. எனினும் நிர்மாணக் காலம் முடிவடையா ததன் காரணமாக அக் காலத்தை நீடித்துத் தருமாறு கோரப்பட்டுள்ளதுடன், நிர்மாணக் காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடித்துள்ளதாகவும் நிர்மாண வேலைகள் நிறைவடைந்ததும் இணைக்கச் சான்றிதழை விடுவித்து, வியாபார வரியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துக் கொள்கிறேன். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று மூன்றாம் நிலை பதவியில் 01 | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை | மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு |

| | | |
|---|---|---|
| வெற்றிடமும், இரண்டாம் நிலைப் பதவியில் 04 வெற்றிடங்களும், ஆரம்ப நிலைப் பதவியில் 10 வெற்றிடங்களும் காணப்பட்டன. | எடுக்கப்பட வேண்டும். | அரச சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு நிறுவனத்திற்கு இணைப்புச் செய்யப்படுகின்றனர் என்பதையும், ஆரம்ப நிலைப் பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்காக தடைதாண்டல் மூலம் அனுமதி பெறப்பட்டு வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகைமை காண் நேர்முகப் பரீட்சைக்கான திகதி குறிக்கப்பட்டிருந்த போதும் நிதி அமைச்சினால் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**கையேற்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள 128 மயான பூமிகளை கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த 128 மயானங்களையும் கையேற்பதற்காக பிரதேச செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ஆ) | ரூபா. 16,189,440 பெறுமதியான 10 வாகனங்களின் உரித்தினை பிரதேச சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 10 வாகனங்களின் உரிமையை பிரதேச சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென் பதை தெரிவித்துக் கொள்கிறேன். |

## 3.6 பெறுகை

### 3.6.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா. 2,047,567 மதிப்பீட்டுப் பெறுமதி ஆகவிருந்த கலே சந்தியிலிருந்து யோத அல வரையிலான ரகவுல பாதைக்கு கொங்ரீட் இட்டு செப்பனிடும் திட்டத்தில் பாதையின் நடுப்பகுதிக்கு 150 மி.மீற்றர் உயரத்திற்கு கொங்ரீட் இடப்படவில்லை என பாதையின் ஆரம்பத்திலிருந்து 42 மீற்றர் மற்றும் 79 மீற்றர் தூரத்தில் துளையாக்கிப் பார்த்ததில் தெரிய வந்தது. பரீட்சிப்பதற்காக எடுக்கப்பட்ட பகுதிகளின் உயரம் முறையே 87.5 மிமீற்றர் மற்றும் 100 மி.மீற்றராக இருந்தன. 10 தலைப்புகளைக் கொண்ட நிர்மாணக் கட்டங்களும் முறையாக நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | குறித்த தரங்களுக்கு இணங்க நிர்மாண நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். | ஒப்பந்தக்காரரினால் குறித்த பாதையின் மேற்பரப்புக்கு 5” உயரத்தில் 1:2:4 கலவை கொங்ரீட் இடுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ள மையால் கொங்ரீட் பகுதி முடிவடையும் வரை கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமல் இருப்பதற்கு கிராம அபிவிருத்தி திணைக்களத்திற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பொடி சிஞ்ஞோ அவர்களின் வீட்டின் அருகாமையிலிருந்து ஜயந்த பண்டா அவர்களின் வீடு வரையிலான பாதையை மணல் மண் இட்டு செப்பனிடுவதற்காக ரூபா. 970,818 செலுத்தப்பட்டிருந்த அதேவேளை பாதையின் சுமார் 12 இடங்கள் தோண்டப்பட்டு நடாத்தப்பட்ட பரிசோதனையின் போது மணல் மண் இடப்பட்ட உயரம் 0.4 அங்குலத்திற்கும் 3.5 அங்குலத்திற்கும் இடைப்பட்டதாகக் காணப்பட்டது. 4x2 அங்குல திருகைக் கல் அடங்கிய மணல் மண் பாதைக்கு இடப்பட்டிருந்ததன் காரணமாக உரிய தரம் அற்ற மணல் மண் இடப்பட்டிருந்தது. | உரிய தரங்களின் அடிப்படையில் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். | மழை மற்றும் சுற்றாடல் சார்ந்த காரணிகளால் பழுதடைந்து காணப்படுகின்றது. |
| (இ) | மீஒய பாலத்திற்கு அருகாமை யிலிருந்து ரம்பாவ குளம் வரையிலான பாதையை தார் இட்டு செப்பனிடுவதற்காக ரூபா. 1,938,866 செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த போதும் | உரிய தரங்களின் அடிப்படையில் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். | குறைபாடுகளை நிவர்த்தி செய்ததன் பின்னர் நிறுத்தி வைக்கப்பட்ட கொடுப்பனவை விடுவிப்பதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | பாதைக்கு ABC இடல், பாதையை மட்டப்படுத்தல், நீர் வழிந்து செல்லும் விதத்தில் தயாரித்தல், ABC பதப்படுத்துவதற்காக உரிய பாரம் கொண்ட பார உருளியொன்றைப் பயன்படுத்தல், 1 ½ , ¾ அங்குல கல் போதியளவு இடல் ஆகிய வேலைகள் முறையாக மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், பாதைப் பரிசோதனையின் போது ABC இடப்பட்ட இடங்களின் உயரம் 2, 4, 4 ½ அங்குலமாகக் காணப்பட்டது. மேலும் பாதை முழுவதும் 1 ½ அங்குல கற்கள் வெளிப்பட்டும் அக் கற்கள் பாதையிலிருந்து கழன்று செல்லும் நிலை காணப்பட்டது. மதிப்பீடு தயாரிக்கும் போது பௌதீக அடிப்படையில் பாதை பரிசோதிக்கப்படாது வேறொரு பாதைக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கையைப் பயன்படுத்தப் பட்டிருந்தது. இதன் காரணமாக சம்பந்தமற்ற வேலைத் தலைப்புகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. | | நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | ரூபா. 1,941,123 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த மீ ஒய அருகாமையிலிருந்து ரணமுத்கம பாதையை தார் இட்டு திருத்தம் செய்வதற்கான திட்டத்தில் பாதை ஆரம்பமாகும் இடமாகிய மாமுனுகமவிலிருந்து 9 – 17 மீற்றர் வரையான பகுதியில் 8x1.2 மீற்றர் விசாலமான பரப்பும் 17 மீற்றர் தொடக்கம் 49 மீற்றர் வரையான பகுதியினுள் 14x1.4 மீற்றர் விசாலமான பரப்பும் கீறங்கியிருந்தது. மேலும் 17 – 49 மீற்றர் எல்லையினுள் ABC இடப்பட வேண்டிய 6 அங்குல உயரத்திற்கு இடப்படாதிருந்ததுடன் பொதுவான உயரம் 4 – 41/2 அங்குலமாகக் காணப்பட்டது. 72 – 81 மீற்றர் வரையான பகுதியினுள் 9x1.9 மீற்றர் மற்றும் 161 – 164 மீற்றர் பகுதியினுள் 3x0.8 மீற்றர் வெடிப்பு ஏற்பட்டிருந்தது. இதன்படி பாதை | உரிய தரங்களின் அடிப்படையில் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். | இது தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது டன் தற்போது அது திருத்தியமைக்கப்பட் டுள்ளது. நிறுத்தி வைக்கப்பட்ட கொடுப்பனவை விடுவிப்பதற்கு முன்னர் மீண்டும் பரிசோதித்துப் பார்த்ததன் பின்னர் விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| | செப்பனிடல் உரிய தரத்தின் அடிப்படையிலும் திருப்திகரமான முறையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (உ) | ரூபா. 1,938,242 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த மடகல்ல ஈ.எம். கிரிபண்டா அவர்களின் வீட்டின் அருகிலிருந்து தேக்கவத்த வரையிலான பாதையை தார் இட்டு செப்பனிடும் திட்டத்தின் பாதையின் ஆரம்பத்திலிருந்து 16 – 20 மீற்றர் பகுதியில் 4x3 மீற்றர் பரப்பு கீழிறங்கியருந்ததுடன் குழி விழுந்த இடத்தை உடைத்துப் பரிசோதித்ததில் ABC இடப்படாமல் இருந்தமையும் உரிய உயரத்திற்கு ABC இடப்படமல் இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. 120 – 163 மீற்றர் வரையான பகுதியில் தார் போதியளவில் இடப்படாமை காரணமாக பாதையின் மேற்பரப்பில் கற்கள் ஒன்றோறொன்று முறையாக சேர்ந்திருக்கவில்லை. மேலும் வேலைத் தலைப்பு இலக்கம் 15 மற்றும் 16 ஆகியவற்றின் கீழ்1.60 கன மீற்றர் கொங்ரீட் இடுவதற்காக ரூபா. 38,063 கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்த போதும் அவ் வேலை நடைபெற்றிருக்கவில்லை. | உரிய தரங்களின் அடிப்படையில் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். | மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையின் முடிவில் ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டது. கீழறங்கயிருந்த இடங்களை திருத்தியமைப்பதற்கு ஒப்பந்தக்காரர் இணக்கம் தெரிவித்துள்ளதுடன், நிறுத்தி வைக்கப்பட்ட கொடுப்பனவை விடுவிப்பதற்கு முன்னர் மீண்டும் பரிசோதித்துப் பார்த்ததன் பின்னர் விடுவிப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

**3.6.2 மிகைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 மே 20 ஆம் திகதி கவனயீனம் அல்லது முறைகேடுகள் காரணமாக ஏற்பட்ட நட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட ரூபா 1,283,910 பெறுமதியான 04 மிகைக் கட்டணங்கள் தொடர்பாக 2019 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்து முடிவுறுத்தப்படவில்லை. | மிகைக் கட்டணம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று அமைக்கப்பட்டிருந்த போதும் 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தின் பின்னர் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. 2019 ஜுலை வரை 02 கணக்காய்வு விசாரணைகள் மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தன. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கை களை பலமாக மேற்கொள்ள வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |